Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

OCTOBER 28, 1930.

ந. 43.] மதராஸ் : செவ்வாய்கிழமை மாலை, 1930-௵ அக்டோபர் மீ 28உ. [PRICE, 6 *pies.*

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

பப்ளிக் டிபார்ட்மென்ட்.

(மிலிடரி.)

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-௵ ஸெப்டெம்பர் மீ 26உ (மிஸலேனியஸ் 1296-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 10.— இந்தியா கவர்ன்மென்டாரின் (ராணுவ இலாகா சம்பந்தமான) அடியிற் கண்ட ஏற்பாடு பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப் படுத்தும்போது, இந்தியாவிலுள்ள ராணுவத்தைச் சேர்ந்த (டிஸ்மவுன்டெட்) ட்யூடி ஸ்க்வாட்ரன்ஸ் என்னும் படைவகுப்புகளில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட இஷ்டப் படும் விடுதலை செய்யப்பட்ட படை வீரர்களைச் சமாதான காலத்தில் ரெஜிஸ்டர் செய்வதற்கான ஏற்பாடு.

1. **ஆள்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்வது.**— ஆள்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ளும் காரியத்துக்காகவும் சேகரிக்கும் காரியத்துக்காகவும் சிப்பந்திகளைப் பராமரித்துவரும் காரியத்துக்காகவும் ஒவ்வொரு ட்யூடி ஸ்க்வாட்ரனும் ஒரு காவல்ரி க்ரூப் ஸென்டருடன் சேர்க்கப்படும்.

2. **சமாதான காலத்தில் ரெஜிஸ்டர் செய்வது.**— காவல்ரி க்ரூப் ஸென்டர்களின் கம்மாண்டிங் ஆபிஸர்கள்-தங்களுடைய சொந்த க்ரூப்புகளைச் சேர்ந்த இந்திய ஆபிஸர்களாயும் படைவீரர்களாயுமிருந்து இந்த ட்யூடி ஸ்க்வாட்ரன்களில் ஊழியம் செய்வதற்கு யோக்கியதையுள்ளவர்களாயும் இஷ்டமுள்ளவர்களாயும் இருப்பவர்களைக் குறித்த விவரங்கள் அடங்கிய ரெஜிஸ்டர்களைச் சமாதான காலத்தில் வைத்துவரவேண்டும். ரெஜிஸ்டர் செய்யப்படுவதன்மேல் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. மேலும், அவர்களைச் சேவகத்துக்கு நிறுத்திவைத்திருப்பதற்காக கட்டணம் எதுவும் கொடுக்கத் தக்கதாகமாட்டாது.

ரெஜிஸ்டர் செய்யும்போது உபயோகிப்பதற்காக (இந்திய ராணுவ நமூனு 942), ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது அவர்களை அழைப்பதற்காக (இந்திய ராணுவ நமூனு 941-A) என்னும் பிரத்தியேகமான நமூனுக்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இண்டென்ட் செய்வதன்மேல் அவை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு சர்ப்பரா செய்யப்படும்.

3. **ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது அனுசரிக்கப்படும் நடவடிக்கை முறை.**— பொதுவாக ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது, காவல்ரி க்ரூப் ஸென்டரின் கம்மாண்டிங் ஆபிஸரானவர் - தம்முடைய க்ரூப் ஸென்டர் விரிவடையும் நிலைமைக்கேற்றபடி, அவசியமென்று கருதப்படும் சங்கி

யைவரையில், அந்த க்ரூப் ஸெண்டரைச் சேர்ந்த ட்யூடி ஸ்க்வாட்ரனுடன் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் நபர்களை உடனே அழைக்க வேண்டும் (யுத்த சிப்பந்திகள், இந்தியா, 4-ம் வால்யுமைப் பார்க்கவும். அவர்கள் வேலையில் சேருகிற தேதியிலிருந்து அந்த க்ரூப் ஸெண்டரைச் சேர்ந்தவர்களாவார்கள். மேலும், கம்மாண்டிங் ஆபிஸருக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, அவர்கள் - வாலாயமாய்ச் செய்யப்படும் டிஸ்மவுன்டெட் அலுவல்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

4. **அர்ஹதை.**--உத்தியோகத்திலிருந்து அனுப்பிவிடப்பட்டவர்களாயிருந்தாலுஞ்சரி பென்ஷன் பெற்று விலகினவர்களாயிருந்தாலுஞ்சரி, ரிஸெர்விஸ்டுகளாயிருந்தவர்கள் உட்பட இந்திய ஆபிஸர்களாயிருந்தவர்கள், படைவீரர்களாயிருந்தவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் நல்ல நடத்தை உள்ளவர்களாயும் இந்தியாவில் ஊழியம் செய்வதற்கு வைத்திய பரிசோதனைப்படி தகுதியானவர்களாயும் இருக்கும்பட்சத்தில், அவர்கள் ட்யூடி ஸ்க்வாட்ரன்களில் மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவதற்காகிலும் மறுபடியும் தாக்கல் செய்யப்படுவதற்காகிலும் தகுதியுள்ளவர்களாவார்கள்.

(ரிஸேர்விஸ்டுகளாயிருந்தவர்களையும் பென்ஷன் பெறுபவர்களையும் தவிர மற்ற) ஆபிஸர்களும் ஸிப்பாய்களும் யுத்தகளத்தில் ஊழியம் செய்வதற்கு வைத்திய பரிசோதனைப்படி தகுதியானவர்களாயிருந்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். ஏனென்றால், அவர்களை ஏற்றுக்கொள்ளுகிற பட்சத்திலே, யுத்தம் செய்யும் யூனிட்டுகளுக்காக புதிதாய் ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்குப் பிரதிகூலமாய் பாதகம் ஏற்படக்கூடும்.

5. **ஊழிய சம்பந்தமான ஷரத்துகள்.**—(a) இந்திய ஆபிஸர்களாயிருந்தவர்கள் - தாங்கள் உத்தியோகத்தை விட்டு நீங்கும்போது நிலையான எந்த அந்தஸ்தை வகித்திருந்தார்களோ அந்த அந்தஸ்தில் மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவார்கள். ஆயினும், அவர்கள் - அவர்களுடைய அந்தஸ்தையும் ஸீனியாரிடியையும் கிரமமாய்க் கவனிக்கையில், எந்த அலுவல்களைச் செய்ய அவர்கள் தகுதியானவர்களென்று அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கும் காவல்ரி க்ரூப் ஸெண்டரின் கம்மாண்டிங் ஆபிஸர் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த அலுவல்களைச் செய்ய அமர்த்திக்கொள்ளப்படுவார்கள். மேலும், அவர்கள் நிலையான யூனிட்டுகளில் தாங்கள் வகிக்கும் உத்தியோகங்களைப் போன்ற உத்தியோகங்கள் வகிக்கிறவர்கள் பெறுகிறதைப்போலவே (யாதொரு ட்யூடி ஸ்க்வாட்ரனுக்குரிய யுத்த சிப்பந்திகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ராங்குகளுக்கும் நம்பர்களுக்கும் உட்பட்டு) தாங்கள் வகிக்கும் உத்தியோகத்தின் சம்பளத்தையும் வர்த்தனைகளையும் பெறுவார்கள்.

நன்கம்மிஷண்ட் ஆபிஸர்களாயிருந்தவர்களும் ஸிப்பாய்களும் - முந்தி அவர்கள் வகித்திருந்த அந்தஸ்தையும் வேலையில் மறுபடியும் அமர்த்திக்கொள்ளப்படும் காலத்தில் அவர்களுக்குள்ள யோக்கியதாம்சங்களையும் நோக்கும்போது மிகவும் தகுதியாயுள்ளதென்று எண்ணப்படும் அந்தஸ்திலும் வேலையிலும் மறுபடியும் அமர்த்திக்கொள்ளப்படுவார்கள்.

(b) யுத்தம் நடக்கும் காலத்திலும் (அல்லது விசேஷ அவசியம் ஏற்பட்டிருக்கிறவரையிலும்), அதிலிருந்து 12 மாதகாலத்துக்கு அவர்கள் ஊழியம் செய்யவேண்டியதாயிருந்தால் அந்த 12 மாத காலத்துக்கும் அவர்கள் ஊழியம் செய்யவேண்டியிருக்கும்.

(c) இந்திய ராணுவ சம்பந்தமான K—1162 நமூனாவில் ஆள்களின் பெயரைத் தாக்கல் செய்வதோடு அத்தாட்சிக் கையெழுத்தும் வாங்கவேண்டும். ஆள்களின் பெயரைத் தாக்கல் செய்தவுடனே அத்தாட்சிக் கையெழுத்து வாங்கவேண்டும்.

(d) சிப்பந்தியைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமாயிருக்கிறபடி, இந்திய கம்மிஷண்ட் ராங்கிலும் நன்கம்மிஷண்ட் ராங்கிலும் அந்த ராங்குகளுக்கும் சேவகத்தில் உள்ளவர்களை உயர்த்தலாம்.

6. **இன்னின்ன வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் இருக்கவேண்டுமென்பது.**—ட்யூடி ஸ்க்வாட்ரனில் இன்னின்ன வகுப்புகள் இருக்கவேண்டுமென்பது - அது எந்த க்ரூப்பைச் சேர்ந்ததோ அந்த க்ரூப்பிலுள்ள ரெஜிமென்டுகளின் அமைப்புக்குச் சாத்தியமானமட்டில் ஒத்திருக்கவேண்டும். ட்யூடி ஸ்க்வாட்ரனில் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் இன்ன வீதாசாரப்படி இருக்கவேண்டுமென்பதை, காவல்ரி க்ரூப் ஸெண்டர் கம்மாண்டர் யுக்தானுசாரமாய்த் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டுவிட்டிருக்கிறது.

7. **சம்பளமும் வர்த்தனைகளும்.**—(a) ட்யூடி ஸ்க்வாட்ரனின் கம்மாண்டிங் ஆபிஸரானவர்-அதே ஹோதாவில் ரெஜிமென்டில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு ஆபிஸருக்குக் கொடுக்கப்படக்கூடிய சம்பளம் பெற பாத்தியதை உடையவராவார்.

(b) வாஸ்தவத்தில் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும்போது, இந்திய ட்யூடி ஸ்க்வாட்ரன்களின் இந்திய ஆபிஸர்களும் இதர ராங்குகளும் அடியிற்கண்டபடி பிரதிபலன் பெற பாத்தியதை உடையவர்களாவார்கள் :—

(i) இந்திய காவல்ரி விதங்களின்படி ராங்குக்குரிய சம்பளம் ;

(ii) ஏற்கனவே சம்பாதித்திருக்கும் பென்ஷன் ;

(iii) நல்ல ஊழியம் அல்லது நல்ல நடத்தை அல்லது திறமைக்காக கொடுக்கப்படும் சம்பளம் : (a) ஸவார் (குதிரைப்படைவீரர்) அந்தஸ்தில் ஊழியம் செய்துவரும் காலத்திலே, வேலையிலிருந்து அனுப்பிவிடப்படுவதற்கு அடுத்து முந்திய காலத்தில் நல்ல நடத்தை அல்லது திறமைக்காக என்ன வீதப்படி சம்பளம் பெற பாத்தியதையுடையவராயிருந்தாரோ அந்த வீதப்படி நல்ல நடத்தை அல்லது திறமைக்காக சம்பளம் ; (b) நன்கம்மிஷண்ட் ராங்குக்கு உயர்த்தப்படுவதன்மேல், போர்ச்சேவகம் செய்பவர்களின் ஜாபிதாவில் சேர்ந்திருக்கும்போது படைவீரருடைய யோக்கியதையையும் ஊழியத்தையும் யாதொரு ஸவாரின் யோக்கியதையாகவும் ஊழியமாகவும் பாவித்தால், அவர் பெறுவதற்குப் பாத்தியதையுடையவராயுள்ள நல்ல ஊழியத்துக்காக கொடுக்கப்படும் சம்பளம் அல்லது நல்ல நடத்தைக்காக கொடுக்

கப்படும் சம்பளம் ஆகிய இவைகளில் எது அதிக அனுகூலமாயிருக்கிறதோ அந்த சம்பளம்.

(c) ஏற்கனவே பென்ஷன் சம்பாதிக்கப்பட்டிராத விஷயங்களிலே, வாங்கியிருக்கக்கூடிய க்ராட்யூட்டி என்னும் நன்கொடைத் தொகையை வாபஸ் செய்வது சம்பந்தமாக வாலாயமாய் விதிக்கப்படும் திட்டத்துக்குட்பட்டு, ட்யூடி ஸ்க்வாட்ரன்களுடன் சேர்ந்து செய்யும் ஊழியமானது பென்ஷன் பெறுவதற்கு அர்ஹதை உண்டாக்கும் ஊழியமாக கொள்ளப்படும். ஆனால், ஏற்கனவே பென்ஷன் சம்பாதிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், யாதொரு உயர்ந்த வீதப்படி பென்ஷன் பெறக்கூடியதாய்ச் செய்வதாக ஷை ஊழியத்தைக் கொள்வதற்கு எந்த விஷயத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

(d) ஸ்க்வாட்ரன் குமாஸ்தாவானவர்-யாதொரு மூன்றாவது க்ரேட் குமாஸ்தாவுக்குக் கொடுக்கப்படக்கூடிய க்ரேட் சம்பளம் பெறுவார்.

(e) அடியிற்கண்ட ஸ்க்வாட்ரன் வர்த்தனைகள் கொடுக்கத்தக்கவையாகும் :—

(i) புத்தகங்கள், காகிதம், பேனா முதலியவை வாங்குவதற்காக முதலில் கொடுக்கப்படும் தொகையாகிய 30 ரூபாய் ;

(ii) மாதாந்த வர்த்தனையாக 30 ரூபாய்; அடியிற்கண்ட திட்டங்களின்படி இந்த வர்த்தனைகள் வாங்கப்படும்: —

(a) ஸ்க்வாட்ரன் ஏற்படுத்தப்படும்போது முதலில் கொடுக்கப்படும் ஷை வர்த்தனை ;

(b) ஸ்க்வாட்ரனில் 50 பேர் தாக்கல் செய்யப்பட்டானவுடனே மாதாந்த வர்த்தனையில் பாதியும், 100 பேர் தாக்கல் செய்யப்பட்டானவுடனே முழு வர்த்தனையும்.

8. **தின போஜனப்படி.**—வேலையில் அமர்ந்திருக்கும்போது, இந்திய சேனைக்குக் கொடுப்பதைப்போலவே தின போஜனப்படி இலவசமாக கொடுக்கப்படும்—இந்திய ஆர்மி ஸெர்விஸ் கோரால் வெளிவிடப்பட்டிருக்கும் தின போஜனப்படி, சர்ப்பரா ஆகிய இவைகளின் வீத நிர்ணயங்களைப் பார்க்கவும்.

9. **பிரயாணங்கள்.**—தங்களுடைய வாசஸ்தலத்திலிருந்து யூனிட்டுக்கும், சேனை கலைத்துவிடப்படும்போது யூனிட்டிலிருந்து தங்களுடைய வீடுகளுக்கும் ரெயில், ரஸ்தா, ஆறு, சமுத்திரம் ஆகிய இவைகள் மார்க்கமாய் இலவசமாக பிரயாணம் செய்யலாம்.

10. **பர்லோவும் ரஜாவும்.**—ட்யூடி ஸ்க்வாட்ரன்களில் முதல் வருஷம் ஊழியம் செய்யும்போது காஷுயல் லீவ் என்னும் ரஜா மாத்திரமே கொடுக்கப்படும். அதற்குப் பிறகு, ஊழிய சம்பந்தமான அவசர காரியங்களுக்குப் பாதகம் ஏற்படாதபட்சத்திலே, பட்டாளத்தின் கம்மாண்டிங் ஆபிஸருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஒன்றுவிட்டு ஒன்றான வருஷங்களில் 2 மாத ரஜாவும் 2 மாத பர்லோவும் கொடுக்கப்படலாம்.

சேனை கலைத்துவிடப்படுவதன்மேல், முழு அலுவலின்மேலிருக்கும்போது கொடுக்கப்படும் சம்பளத்தோடு ஒரு மாத ரஜா கொடுக்கப்படும்.

11. **தண்டோடுகூட போகிறவர்கள்.**—அந்தந்த பிரதேசத்தில் எந்த சம்பள வீதங்களின்படி இவர்கள் கிடைப்பார்களோ அந்த வீதங்களில் மிகக்குறைவாயுள்ள வீதங்களின்படி, 2-ம் வகுப்பைச் சேர்ந்த தண்டோடு கூடப்போகிறவர்களாக அவர்களை அமர்த்திக்கொள்ளவேண்டும் [1922-ம் வருஷத்து 287-ம் நெ. (இந்திய) ஆர்மி இன்ஸ்ட்ரக்ஷன்].

12. **முஸ்தீதும் உடையும்.**—உடைக்காக வர்த்தனை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. எக்விப்மென்ட் டேபில்ஸ் என்னும் முஸ்தீது அட்டவணைகளில் விதித்திருக்கிற வீதங்களின்படி உடையும் முஸ்தீதும் கொடுக்கப்படும். மேலும், அவை கவர்ன்மென்டின் சொத்தாகவே இருந்துவரும்.

13. **நிஷ்கரிஷையான காலத்துக்கொருமுறை சரி பார்ப்பது.**—ட்யூடி ஸ்க்வாட்ரன்களுடன் சேர்ந்து அலுவல் செய்வதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் சகல ஸிப்பாய்களையும் பிரதேச கவர்ன்மென்டாரும் பரிபாலன கர்த்தர்களும் வருஷாவருஷம் சரிபார்ப்பார்கள். அந்தப்படி சரிபார்க்கும்போது, கடைசியாய்த் தெரியவந்திருக்கும் மேல்விலாசங்களைக் காட்டும் பெயர்வாரி ஜாபிதாக்களை அனுசரித்துச் சரிபார்க்கவேண்டும். இந்த ஜாபிதாக்களை, ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மீ 1வ யன்று காவல்ரி க்ரூப் ஸென்டர்களின் கம்மாண்டிங் ஆபிஸர்கள் அவர்களுக்கு சர்ப்பரா செய்வார்கள். பாடியாலா, காஷ்மீர், க்வாலியர் என்னும் இந்திய சமஸ்தானங்களில் வாசஞ்செய்பவர்களின் விஷயத்திலே, ஷை சரிபார்க்கும் வேலையானது - காவல்ரி க்ரூப் ஸென்டர்களின் கம்மாண்டிங் ஆபிஸர்களால் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவர்களுக்கு பதில் எழுதுவதற்காக ஏற்கனவே கட்டணம் செலுத்தி அந்த ஆபிஸர்களால் அனுப்பப்பட்டுள்ள தபால் கார்டுகள் மூலமாய் நடத்தப்படும்.

ஸி. பி. காட்டெரெல்,

ஆக்டிங் சீவ் ஸெக்ரெடரி.

லா டிபார்ட்மென்ட்.

(ஜெனரல்.)

விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் வருஷம் அக்டோபர் மீ 23 வ (மிஸலேனியஸ், 4471-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 854.—சென்னபட்டணம் 1924-ம் வருஷத்து 3-வது ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1911-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கொடைக்கூலி வண்டி ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (i) அடையாளமிட்ட பகுதியுடன் சேர்த்திருக்கும் விலக்கு நிபந்தனையின்படி, ஷை ஆக்டில் கண்ட நிபந்தனைகளை இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகாசி மியுனிஸிபல் விஸ்தீர்ணத்துக்கு

1931-ம் ௵ மே௴ 1௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது வியாபிக்கும்படிச் செய்ய உத்தேசித்திருக்கிறதென்று இதனால் அறிக்கையிடப்படுகிறது. ஷை ஆக்டை மேலே உத்தேசித்திருக்கிறபடி வியாபிக்கச் செய்வதற்கு ஆட்சேபனையுள்ள நபர்கள் இந்த விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாதத்துக்குள்ளாக இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தங்களுடைய ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாகிறது.

யூ. ராம ராவ்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம் ௵
அக்டோபர்௴ 22௳.

நெ. 855.—(1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵ மார்ச்௴ 20௳ யுள்ள போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தங்களைக் களிகூர்ந்து வெளியிடுகிறார்கள் :—

திருத்தங்கள்.

I

ஷை விதிகளைச் சேர்ந்த இப்போதுள்ள 7-வது விதிக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவும் :—**

"7. யாதொரு மோடார் வண்டியின் ரெஜிஸ்டரான சொந்தக்காரர் தம்முடைய மேல்விலாசத்தை மாற்றிக்கொள்ளுவாரானால், அவர் - தம்முடைய புதிய மேல்விலாசத்தில் வாசஞ்செய்யத் தொடங்கியதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள், அந்த வண்டியின் ரெஜிஸ்டரான நம்பரைப்பற்றிய விவரங்களைக் கண்டு அப்படி மேல்விலாசம் மாற்றியதைக் குறித்து, தம்முடைய புதிய மேல்விலாசம் எந்தப் பிரதேசத்தில் இருக்கிறதோ அந்தப் பிரதேசத்தின் ரெஜிஸ்டர் செய்யும் அதிகாரிக்கு எழுத்துமூலமாகத் தெரிவிக்கவேண்டும்.

மேலும், அவர் - எந்தப் பிரதேசத்திலிருந்து தம்முடைய மேல்விலாசத்தை மாற்றிக்கொண்டிருக்கிறாரோ அந்தப் பிரதேசத்தின் ரெஜிஸ்டர் செய்யும் அதிகாரிக்கும் தெரிவிக்கவேண்டும்.

இந்த விதியானது—

(i) தங்களுடைய வீட்டு மேல்விலாசத்தை மாற்றாமல் தேசத்தில் சுற்றுப்பிரயாணம் மாத்திரமே செய்துவரும் சொந்தக்காரர்களுக்கோ, அல்லது

(ii) ரெஜிஸ்டர் செய்திருப்பதைப்பற்றிய ஸெர்டிபிகேட்டில் கண்டிருக்கும் மேல்விலாசத்திலல்லாமல் வேறே எந்த இடத்திலாகிலும் நான்கு மாதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு அங்காமியாக வசித்துவரும் சொந்தக்காரர்களுக்கோ

பிரயோகப்படமாட்டாது.

இந்த விதியின் காரியத்துக்காக, 'ரெஜிஸ்டரான சொந்தக்காரர்' என்னும் சொற்றொடரில், மோடார் வண்டியைச் சிறிதுகாலத்துக்காகிலுஞ்சரி மற்றப்படியாகிலுஞ்சரி தம் சுவாதீனத்தில் வைத்திருக்கும் யாதொரு நபரென்பதும் அடங்கும்."

II

ஷை விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் நமூனாக்களைச் சேர்ந்த C நமூனாவில் இப்போதுள்ள **3-வது குறிப்புக்குப் பர்த்தியாக,** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவும் :—**

"யாதொரு மோடார் வண்டியின் ரெஜிஸ்டரான சொந்தக்காரர் தம்முடைய மேல்விலாசத்தை மாற்றிக்கொள்ளுவாரானால், அவர் - தம்முடைய புதிய மேல்விலாசத்தில் வாசஞ்செய்யத் தொடங்கியதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள், அந்த வண்டியின் ரெஜிஸ்டரான நம்பரைப்பற்றிய விவரங்களைக் கண்டு அப்படி மேல்விலாசம் மாற்றியதைக் குறித்து, தம்முடைய புதிய மேல்விலாசம் எந்தப் பிரதேசத்தில் இருக்கிறதோ அந்தப் பிரதேசத்தின் ரெஜிஸ்டர் செய்யும் அதிகாரிக்கு எழுத்துமூலமாகத் தெரிவிக்கவேண்டும்.

மேலும், அவர் - எந்தப் பிரதேசத்திலிருந்து தம்முடைய மேல்விலாசத்தை மாற்றிக்கொண்டிருக்கிறாரோ அந்தப் பிரதேசத்தின் ரெஜிஸ்டர் செய்யும் அதிகாரிக்கும் தெரிவிக்கவேண்டும்.

இந்த விதியானது—

(i) தங்களுடைய வீட்டு மேல்விலாசத்தை மாற்றாமல் தேசத்தில் சுற்றுப்பிரயாணம் மாத்திரமே செய்துவரும் சொந்தக்காரர்களுக்கோ, அல்லது

(ii) ரெஜிஸ்டர் செய்திருப்பதைப்பற்றிய ஸெர்டிபிகேட்டில் கண்டிருக்கும் மேல்விலாசத்திலல்லாமல் வேறே எந்த இடத்திலாகிலும் நான்கு மாதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு அங்காமியாக வசித்துவரும் சொந்தக்காரர்களுக்கோ

பிரயோகப்படமாட்டாது.

இந்த விதியின் காரியத்துக்காக, 'ரெஜிஸ்டரான சொந்தக்காரர்' என்னும் சொற்றொடரில், மோடார் வண்டியைச் சிறிதுகாலத்துக்காகிலுஞ்சரி மற்றப்படியாகிலுஞ்சரி தம் சுவாதீனத்தில் வைத்திருக்கும் யாதொரு நபரென்பதும் அடங்கும்."

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)
C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.